முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: 5 | 13-3-59 | வெள்ளி | ஒலி: 42

திருவாளர் தேசீயம் பிள்ளை!

2

எமதர்மராஜனின் மாளிகையிலுள்ள விருந்து விடுதியில் தேசியம் பிள்ளை பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.

“உல்லாச மண்டபம் என்றீனே; இதற்குப் பெயர்தானு உல்லாச மண்டபம்?” என்று ஆச்சரியத்தோடு தேசியம் பிள்ளை மிரளமிரள விழித்து சுற்றுமுற்றும் பார்க்கிறார். குவியல் குவியலாக ஏதோ ஒரு பொருள் கொட்டப்பட்டிருக்கிறது. அருகே சென்று பார்க்கிறார். சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சுத் தலைகள் அப்படிக் குவிக்கப்பட்டிருக்கின்றன.

“அய்யோ! இதுவா உல்லாச மாளிகை?” — தேசியம்பிள்ளை கத்திவிடுகிறார்.

“ஆமாம்! இதுதான் உல்லாச மாளிகை! கொட்டிக்கிடக்கும் இவைகளை என்னவென்று கருதிணுய்? இவைதான் எங்கள் நாட்டு உருளைக்கிழங்கு! எங்கள் உல்லாச மாளிகையைச் சுற்றி விளையும் பொருள் இதுதான்—இல்லை; இல்லை—இங்கு அறுவடையாகும் பொருள் இதுதான்!” எனச் சிரித்தபடி ஒரு உருவம் எதிரே வந்தது. அந்த உருவம்தான் எமலோகத்தில் ராணுவ தளபதிப் பதவியிலே யிருக்கும் “ஸ்ரீ மயானம்”!

மயானத்தின் இஷ்டப்படிதான் எமதர்மனின் நிகழ்ச்சிநிரல்கள் வகுக்கப்படும். அதன்படி வகுக்கப்பட்ட நிகழ்ச்சியை யொட்டி எமனுக்கு முன்னதாக தேசியம் பிள்ளையைப் பேட்டி காணவே ராணுவத் தளபதி அங்கு வந்தது!

“என்னய்யா! குழந்தைகளின் தலைகளை அறுத்துக் கொட்டிவிட்டு இந்த இடத்திற்குப் பெயர் உல்லாச மண்டபம் என்கிறீர்கள்?” என்று சோகமும் வேகமும் போட்டியிடக் கேட்டார் தேசியம்பிள்ளை.

“எங்கள் நாட்டில் உல்லாச மண்டபத்துக்குள்ளேயே இப்படிக் குழந்தைத் தலைகள் கொட்டப்பட்டிருக்கும்; ஆனால் உங்கள் நாட்டில் உல்லாச மண்டபத்துக்கு வெளியே குழந்தைகளின் தலைகளைப் பொறுக்கலாமாம்! இரண்டுக்கும் பெரிய வித்தியாசம் ஒன்றுமில்லையே!” — தளபதி கேலியாகப் பதில் சொன்னான்.

“அபத்தம்! அபாண்டம்!! யார் சொன்னது அப்படி? பொய்! பொய்!!” — தேசியம் பிள்ளை கத்தினர்.

“இது வரையில் இங்கு குடியேறிய எல்லோரும் ஒத்துக்கொண்ட உண்மையை நீர் மறுக்கிறீர்! இதோ பொறுக்கிக் குவிக்கப்பட்டுள்ள அத்தனை தலைகளும் உங்கள் நாட்டிலேயிருந்து கொண்டு வரப்பட்டவைதான்! இவைகளில்பல,கல்யாணமாகாத பெண்களின் கருவிலே உதித்தவை! பல, விதவைகளின் வயிற்றில் விளைந்தவை! ஆயிரக் கணக்கானவை ஆற்றிலும் குளத்திலும் மிதந்தவை! ஏராளமான தலைகள் வறுமை வயலில் பொறுக்கப்பட்டவை! சில குழந்தைகளின் நெற்றியில் அவமானச் சின்னம் குத்தப்பட்டிருக்கும். சிலவற்றின் கழுத்தில் தாயின் கட்டைவிரல் ரேகைகள் அழுத்தமாகப் பதிந்திருக்கும். அந்த ரேகைகளை ஆராய்ச்சி செய்ததில் ஈவு இரக்கமுள்ள பெண்களின் ரேகைதான் அவை யென்றும் எங்கள் ஆஸ்தான ரேகை நிபுணர்கள் முடிவு கூறியிருக்கிறார்கள். சில குழந்தைகளின் கருவிழிகள் வட்ட வடிவமான அசோகச் சக்கரங்கள் போலவே அமைந்திருந்ததையும் கண்டோம். அது பற்றிய ஆராய்ச்சியை எமது விஞ்ஞான மேதை ஒருவரிடம் ஒப்படைத்திருக்கிறோம். இன்னும் முடிவு வெளிவரவில்லை. இப்போது என்ன சொல்கிறீர்?”

ராணுவத் தளபதியின் ஆத்திரங் கலந்த பேச்சைக் கேட்டு தேசியம் பிள்ளை தலைகுனிந்தவாறு நின்றார்.

அப்போது ஐந்தாறு பெண்கள் கையில் கிண்ணங்களை ஏந்தியவாறு அவர் எதிரே வந்து நின்றனர். பெண்களா அவர்கள்? பிள்ளை அவர்களை உற்றுப் பார்த்தார். ஆமாம்; பெண்களேதான்! முடிவு கட்டிக் கொண்டார்.

“ம்! குருதி பானம் அருந்தும்!”—தளபதி உபசரித்தார்.

கிண்ணங்களைப் பார்த்தார் தேசியம் பிள்ளை! அய்யோ! கண்கள் சுழன்றன—எல்லா கிண்ணங்களிலும் பொங்கி வழியும் ரத்தம்!

“ரத்த பானமா?” — தேசியம் பிள்ளை அலறிவிட்டார்.

“ஆமாம் — இது கல்லக்குடி பானம்! அது தூத்துக்குடிச் சாறு! இது சேலத்து ரசம்! இது வால்பாறையில் பிழிந்தெடுத்தது!” என அடுக்கிக் கொண்டே போனான் தளபதி. தேசியம் பிள்ளையால் நிற்க முடியவில்லை.

தளபதி கலகலவென சிரித்தான். “ஏன் திகைக்கிறீர்? எல்லா பானங்களுமே உமது நாட்டில் தயாரித்ததுதானே! வெளிநாட்டுச் சரக்கு என்று எண்ணுகிறீரா? இல்லை; உமது சொந்த நாட்டுச் சரக்குதான்! சிறு துளிகளாவது அருந்தும்!” —தளபதி மிகவும் பிடிவாதப் படுத்தினன்.

“வேண்டாம். பூமாதேவியைக் குளிப்பாட்டுவதற்காகத் தயாரித்த புண்யதீர்த்தம் இது! இதை இங்கே பானமாக அருந்துவது என்றால் எப்படி முடியும்?” — தேசியம்பிள்ளை கொஞ்சம் கோபத்தோடு பதில் கூறினார். தளபதி விடவில்லை.

“எமலோகத்தில் நடைபெறும் உபசாரத்தை சரிவர ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு என்ன தண்டனை தெரியுமா?”

தேசியம்பிள்ளை விழித்தார்!

“பூலோகத்தில் ஆரம்ப ஆசிரியர்களாகப் பிறக்க வேண்டும்!”

“வேண்டாம் — வேண்டாம்! உபசாரத்தை மறுக்காமல் ஏற்றுக் கொள்கிறேன். கொடுங்கள் கிண்ணங்களை!”

தேசியம்பிள்ளை சிறு மயக்கத்தோடு அமர்ந்தார்.

“ஆகாஷ்வாணி எங்கே?” என்று அதட்டிக் கேட்டான் தளபதி.

“இதோ வந்தேன்!” என்று அரை நிர்வாணமாக ஒரு பேயுருவப் பெண் ஓடிவந்தாள். நிலக்கரியை அரைத்துப் பூசினாற் போன்ற மேனி! நெருஞ்சி முட்கள் நிறைந்த தரை போன்ற முகம்! அவள்தான் எமலோகத்து இசைக் குயில்! அந்த ஆகாஷ்வாணி முகாரி ராகத்தில் பாட ஆரம்பித்தாள். பாட்டைக் கேட்டதும் தேசியம் பிள்ளைக்குப் புதுத் தெம்பு உண்டாயிற்று. ஆகாஷ்வாணியின் முகத்தையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார். அவளும் அவரையே வைத்த விழி வாங்காமல் பார்த்தாள். இருவரிடையே விவரிக்க

கருணாநிதி

[தொடர்ச்சி பக்கம்—4]



மனிதனின் கதை

பி. சி. கணேசன்

28. ஷார்லமேனும் ஹரூன்-உல்-ரஷீதும்

அன்புள்ள மாதவி,

டூர்ஸ் போர்க்களத்தில் சார்லஸ் மார்ட்டெல் இஸ்லாமியர்களைத் தோற்கடித்ததால் இஸ்லாமிய ஆதிக்கம் ஐரோப்பாவில் பரவுவது தடுக்கப்பட்டது என்பதைச் சென்ற கடிதத்திலேயே உனக்குச் சொல்லியிருந்தேன். சார்லஸ் மார்ட்டெல்லைத் தலைவனாகக் கொண்டிருந்த மக்கள் பிராங்க்ஸ் (Franks) என்ற இனத்தைச் சேர்ந்தவர்களாவார்கள். ரோம் சாம்ராஜ்யத்தின் மீது படையெடுத்த இனங்களில் இதுவும் ஒன்று. இவர்கள் வட பிரான்சில் ரைன் நதி தீரத்தில் குடியேறினர். ரோமானியர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு பழகியதால், ரோமானியப் பழக்கவழக்கங்களும் கலாச்சாரமும் இவர்களிடம் நிறைந்து காணப்பட்டன. ரோமானியர்களின் தாய்மொழியான லத்தீன் (Latin) மொழியை சிதைந்த நிலையில் இவர்கள் தங்கள் மொழியாகப் பேசினர். கிறித்துவமதக் கோட்பாடுகள் இவர்களுக்கு உடன்பாடாக இருந்தன. ரோமானிய சாம்ராஜ்யம் பிளவுபட்டுச் சிதறியபொழுது ஏற்பட்ட குழப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பிராங்க்ஸ் தங்களின் ராஜ்யத்தைப் பெருக்கிக் கொண்டனர். இவர்களுடைய ராஜ்யத்துக்கு இஸ்லாமியர்களால் ஏற்பட்ட ஆபத்திலிருந்து காப்பாற்றிக்கொண்டதனால், ஐரோப்பாவின் வரலாற்றையே இவர்கள் மாற்றியமைத்து விட்டார்கள். இல்லாவிட்டால், வட இந்தியாவில் இஸ்லாமியர்கள் ஆதிக்கத்தை ஸ்தாபித்ததுபோல் ஐரோப்பாவிலும் ஸ்தாபித்திருப்பார்கள்!

வரலாற்றில் ஷார்லமேன் (Charlemagne) என்ற மன்னனைப் பற்றி நீ நிறையக் கேள்விப்பட்டிருப்பாய். ஆடம்பரத்துக்குப் பெயர்போனது, அவனுடைய அரசவை. ஷார்லமேன், சார்லஸ் மார்ட்டெல்லின் பேரன். அவனுடைய சாம்ராஜ்யம் இப்பொழுது ஜெர்மனி, ஆஸ்திரியா, இத்தாலி என அழைக்கப்படும் நாடுகளை உள்ளடக்கி இருந்தது. கி. பி. 800-ல் ஷார்லமேன் போப்பாண்டவரால் சக்கரவர்த்தியாக முடிசூட்டப்பட்டான். இஸ்லாமியர்களை வென்று கிறித்துவ நெறியைப் பாதுகாப்பதில் இவன் அக்கறை காட்டியதால், இவனுடைய சாம்ராஜ்யம் 'புனித ரோம் சாம்ராஜ்யம்' (Holy Roman Empire) என அழைக்கப்பட்டது.

ஷார்லமேன் காலத்தில் எண்ணற்ற தேவாலயங்கள் நாடெங்கிலும் கட்டப்பட்டன. அவற்றின் சுவர்களில் ஷார்லமேனின் பெருமையைச் சித்தரிக்கும் சித்திரங்கள் தலைசிறந்த ஓவியர்களால் தீட்டப்பட்டன. கிறித்துவ மதம் அரசியல் செல்வாக்குடன் அரியணையில் வீற்றிருந்தது. மோட்ச சாம்ராஜ்யத்தை பூலோகத்தில் ஸ்தாபித்த மன்னன் என்று கத்தோலிக்க மத ஏடுகள் அவனைப் போற்றிப் புகழ் மாலைகள் சூட்டியிருக்கின்றன. மொகலாய மன்னர்கள் சிலர் இந்தியாவில் செய்ததைப் போலவே ஷார்லமேன் ஐரோப்பியர்களைக் கட்டாயப்படுத்தி கிறித்துவர்களாக மதம் மாறச் செய்தான்.

ஷார்லமேன் போட்டி பூசல்களுக்கிடையே மன்னனாக முடிசூடி, உற்றார் உறவினரை வென்று, எதிரிகளைக் களத்தில் புறமுதுகிட்டு ஓடச் செய்து, போப்பாண்டவரை நண்பராக்கிக் கொண்டு, மத ஒற்றுமையே சாம்ராஜ்யத்தின் அஸ்திவாரம் எனக் கண்டு தன் குடிமக்களையெல்லாம் கிறித்தவர்களாக மாற்றி, ஒரு மத சாம்ராஜ்யத்தையே நிறுவியவன்! அவன் ஒரு சிறந்த கல்விமான்; கற்றோரிடையே அளவளாவி, அவர்களிடம் பிரச்சினைகளை ஆராய்வதில் அதிக அக்கறை காட்டுவான். நூதனமான ஒழுக்கக் கோட்பாடு உடையவன். இவனுடைய புதல்விகள் யாரும் திருமணம் செய்துகொள்ள இவன் சம்மதம் அளிக்கவில்லை. ஆனால் அவர்கள் திருமணமின்றி அரசவை வாலிபப் பிரபுக்களோடு செய்த காதல் லீலைகள் பற்றியும் இவன் கவலைப்படவில்லை. ஷார்லமேனே குறைந்தகால இடைவெளியில் நான்கு முறை திருமணம் செய்து கொண்டான். இதைத் தவிர, பல அழகிகளையும் தன் காமக் கிழத்திகளாக வைத்திருந்தான்.

மதவுணர்வையும் கல்வியறிவையும் இரு கண்களாகப் போற்றி வளர்த்தான். தான் இறந்தபொழுது தன்னுடைய சொத்தில் முக்கால் பகுதியை தேவாலயங்களுக்கு உயில் எழுதி வைத்து உரிமையாக்கினான். கி. பி. 814-ல், அவனுடைய எழுபதாவது வயதில் ஷார்லமேன் உயிர் நீத்தான்.

ஷார்லமேனுக்குப் பிறகு அவனுடைய ராஜ்யம் சிதறுண்டது. அதற்குப் பிறகு ஏற்பட்ட பிரிவுகள் வரலாற்றில் முக்கியமானவை. காரணம், அதன் பிறகு தான் மதவுணர்ச்சியும் இனவுணர்ச்சியும் ஐரோப்பாவில் மறைந்து மொழி, எண்ணங்களின் அடிப்படையில் புதிய தேசீய இனங்கள் தோன்றின. இந்த தேசீய இனங்கள் பிறகு புதிய பல நாடுகளைத் தோற்றுவித்தன. அப்படித் தோன்றிய நாடுகள்தான் இன்றுள்ள நவ ஐரோப்பிய நாடுகளில் பெரும்பாலானவை ஆகும். அவைகளைப் பற்றியெல்லாம் பின்னர் உனக்கு எழுதுவேன்.

மாதவி, பாக்தாத் நகரிலிருந்து இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை யாண்ட காலிஃபாவை மையமாக வைத்து எழுந்த உலகப் பிரசித்திப் பெற்ற 'அரேபிய இரவுகள்' (Arabian Nights) என்ற கதைகள்தான் உனக்குத் தெரியுமே? அக்கதைகளின் பெரும்பகுதி நம்பமுடியாத கற்பனையானாலும், அப்பொழுதிருந்த பாக்தாத் நகரின் நிலைபற்றியும், அங்கிருந்து ஆணை செலுத்திய காலிஃபா பற்றியும் அறிய அவை வாய்ப்பளிக்கின்றன. 'அரேபிய இரவுகள்' கதையில் வரும் காலிஃபா கி. பி. 786 முதல் 809 வரை பாக்தாத் நகரில் சிறப்புடன் ஆண்டவன். அவன் பெயர் ஹரூன்—உல்—ரஷீத் என்பது. ஷார்லமேனும் ஹரூன்-உல்-ரஷீதும் சமகாலத்தவர்கள். இருவருக்கிடையேயும் கடிதப் போக்குவரத்துகூட இருந்ததாகத் தெரிகிறது.

ஹரூன்—உல்—ரஷீத் காலிஃபாவாக இருந்தகாலம், பாக்தாத் நகரின் மகோன்னதகாலம். மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும், மலர் வனங்களும், [illegible]களும், சந்தைகளும், சல்லாப மண்டபங்களும், விநோதப் பொருட்கள் நிரம்பிய கண்காட்சிகளும் பாக்தாத் நகரை அழகுபடுத்தின. கிழக்கிலிருந்தும் மேற்கிலிருந்தும் வியாபாரிகள் வந்து குழுமி அந்நகரைக் குபேரப்பட்டணமாக்கினர். சர்க்கார் நிர்வாகம் பல அலுவலகங்களாக (Departments)ப் பிரிந்து செயல்பட்டன. திறமையான அஞ்சல் இலாகா சாம்ராஜ்யத்தின் பல பாகங்களைத் தலைநகரோடு இணைத்தது. மருத்துவ நிலையங்கள் பாக்தாத் நகரில் ஏராளமாக இருந்தன. கல்விமான்களும் கலைஞர்களும் அந்நகருக்கு வந்து காலிஃபா ஹரூன்—உல்—ரஷீதுடன் அளவளாவிச் சென்றனர்.

காலிஃபா ஹரூன்-உல்-ரஷீத் செல்வத்திலே திளைத்தான். அவனுடைய அந்தப்புரத்தை எண்ணற்ற அழகிகள் அலங்கரித்தனர். அடிமைகள் குற்றேவல் புரிய எந்நேரமும் கைகட்டிக் காத்திருந்தனர். சீனாவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் அரசியல் தூதர்கள் வந்து அவன் பேட்டிக்காகக் காத்துக் கிடந்தனர். இந்தியாவிலிருந்து பாக்தாத் நகருக்கு வடமொழி வல்லுனர்கள் ஹரூன்-உல்-ரஷீதால் அழைக்கப்பட்டனர். அவர்களின் உதவியுடன் பல வடமொழி நூல்கள் அரேபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன.

'ஸ்டாக்கிங்ஸ்' என்ற காலுறை அணியும் பழக்கம் முதன் முதல் அரேபிய செல்வந்தர்களிடையே காணப்பட்டது. பிறகே அப்பழக்கம் ஐரோப்பிய நாடுகளில் பரவியிருக்க வேண்டும். அரேபியர்களுக்குப் பிரயாணம் செய்வதில் நிறைய விருப்பம் உண்டு. கடல் கடந்தும் பல நாடுகளுக்குச் சென்றனர். அப்படி வெளிநாடு சுற்றிய பிரயாணிகளில் இந்தியாவுக்கு வந்து போன ஆல்பிரூனி (Alberuni) குறிப்பிடத்தக்கவன். அவன் எழுதிப் போன பிரயாணக் குறிப்புக்கள் எத்தனையோ சரித்திர உண்மைகளை நமக்குச் சொல்லுகின்றன. அரேபியர்கள் கற்பனை வளம் படைத்தவர்கள். பாக்தாத் நகரைத் தலைநகராகக் கொண்ட சாம்ராஜ்யத்தை அறியாதவர்கள் கூட 'ஆயிரத்தொரு இரவுகளை'யும், அதில் வரும் சுவையான நிகழ்ச்சிகளையும் அறிவார்கள். காலிஃபாவின் சாம்ராஜ்யத்தைவிட அரேபியர்கள் இலக்கிய உலகில் நிர்மாணித்த கற்பனை சாம்ராஜ்யம் உலக மக்களின் உள்ளங்களில் அதிக செல்வாக்குப் பெற்றுவிட்டது!

ஹரூன் — உல் — ரஷீதின் மரணத்துக்குப் பிறகு அரேபிய சாம்ராஜ்யமும் பலமிழந்தது. செல்வச் செருக்கில் மிதந்த நகரம் சீரழிந்தது. புதிய இனங்கள் தங்களின் கொடிகளை உயர்த்திப் பிடித்தன. 'அரேபிய இரவுகளில்' வரும் கனவு போலவே பாக்தாத் நகரின் சக்தியும் அதிகாரமும் மறைந்து போயிற்று. மதமும் அரசியலும் இணைந்த அதிகாரக் கயிற்றைக் கையில் பிடித்திருந்த காலிஃபாக்கள், சுயநலம் மிகுந்து ஒழுங்கீனமாக நடக்கவே செல்வாக்கிழந்தனர்.

புதிய சக்திகள் தோன்றின. மனிதனின் கதையில் மீண்டும் ஒரு திருப்பம் தோன்ற அவை வழிகோலின!

அன்புள்ள,

அகத்தியன்.

விற்பனையாகிறது!

தோழர் டி. கே சீனிவாசனின்
கருத்துச் சித்திரம்

ஆடும் மாடும்

விலை ரூ. 1-50

[விற்பனையாளர்களுக்குத் தகுந்த கழிவு உண்டு. தனிப் புத்தகம் பதிவுஅஞ்சலில் பெற ரூ. 2—25 மணியார்டர் செய்யவும்.]

அருணை பதிப்பகம்,
127, தெற்காவணி மூலவீதி,
மதுரை.

சென்னை விற்பனை உரிமை:
நேரு நியூஸ் மார்ட்,
லஸ், மைலாப்பூர்,
சென்னை—4.

வெள்ளி 13—3—59 சென்னை

சூதுத் திட்டம்!

செங்கோல் பிடித்தோம்—இனி செங்குருதி கொட்டி மீட்ட சுதந்திரத் தாயைக் காத்து வளர்ப்போம்— என்று வாய்ப்பறையடித்தவர்கள், இன்று கொடுங்கோல் தரைத்தனத்திற்குத் தேவையான இலட்சணங்கள் எங்கே, எங்கே எனத் தேடியலையும் கெடுகெட்ட நிலையைத்தான் காணுகிறோம், இந்திய உபகண்டத்தில்!

உலகம் கண்டு சலித்துப்போன சர்வாதிகாரம்—உத்தமர் காறி உமிழும் காட்டு ராஜா தர்பார்—இத்தனைக்கும் எமக்கில்லை ஈடு; இணையில்லை வேறு நாடு என்று புகழாரம் சூட்டிக் கொள்ளும் டில்லி மூலவர்களின் கறைபடிந்த போக்கு, இன்று கரை கடந்த வெள்ளமாகிவிட்டது!

பதவி எனும் எலும்புத் துண்டுக்குப் பல்லை இளித்துவரும் பண்பு கெட்டவர்கள்—அவர்களின் பாதத்தடியில் பரம்பரை மொழியை வெட்டித் துண்டாக்கும் விழிமூடிகள்—இப்படிப்பட்டவர்கள் பவனி புறப்பட்டுவிட்ட அந்த 'ஜனநாயக எதிரி'களுக்கு வெண்சாமரம் வீசுகின்றனர்—இந் நிலைமை அதனினும் கொடுமை!

"தேசியம் என்பதுகூட குறுகிய நோக்கம்தான்"—என்ற தீவிரக் கருத்தைச் சொன்னார் வினோபா. அதைக் காற்றுக்கு உணவாக்கிவிட்டு—அவர் கால்பட்ட சுவட்டிலே இரைக்க இரைக்கப் பாத யாத்திரையும் நடத்திவிட்டு—தேசீய மொழியாம் இந்திக்கு அரியணை வாசத்தைத் தேடுகிறார்கள்!

பெற்ற தாயின் அடிவயிற்றிலே தீப்பந்தத்தைச் சொருகும் பெரும் துரோகியின் நிலையிலே இருக்கின்ற 'டில்லியின் பாதந்தாங்கி'களோ ஏன் என்று கேட்பதில்லை—அப்படி வினவினால் கனவாகிவிடுமோ நம் அதிகார வாழ்வு என்ற அச்சம்—ஆகவே தாய் மொழியைத் தச்சமென ஒதுக்கும் துரோகப் பண்புக்கு ஆலவட்டம் சுற்றுகிறார்கள்!

அடுக்காது என்றுரைக்கும் அறிஞர்கள் ஒடுக்கப்படுகின்றனர்!

தடுப்போம் என்றுரைப்போரின் தலை உடைக்கச் சட்டமும் உருவாகிறது!

"புரியவில்லையே" என்று புலம்பும் பாமரனுக்குப் புதுமொழி கற்பிக்க வாரி இறைக்கப்படுகிறது, அவன் தந்த வரிப் பணம்; திறந்து விடப்படுகிறது டெல்லியின் கஜானா!

டெல்லிப் பேரரசின் கல்வி அமைச்சர் இப்போது புதுத் திட்டம் ஒன்றையும் வெளியிட்டிருக்கிறார். இந்தி மொழி பரவ 'இந்தி ஆசிரியர்கள் தேவை; அந்த ஆசிரியர்களுக்குக் கல்வி போதிக்க பயிற்சிக் கல்லூரிகள் நாடெங்கும் தேவை; ஆகவே் மாநில அரசுகள் அனைத்திற்கும் நூறு சதவீத மானியம் அளிக்கப் போகிறோம்!'

—இந்தி வெறி பிடித்த ஓநாய்களின் நாக்கிலே சுவை எழும்பும் இந்தச் செய்தி கேட்டு சொந்த மொழி பாழாகிவிடுமே—என்ற அச்சம் மட்டுமல்ல; ஏழை மக்களின் இரத்தமும் வியர்வையும் இப்படி கட்டாந்தரைக்குத் திறந்து விடப்படுகிறதே—என்ற ஏக்கமும் ஏற்படுகிறது!

கதர் உடுத்தியோர் தவிர—கல்வியிற் சிறந்தோர் எதிர்க்கிறார்கள்; கைராட்டை எடுத்தோரைத் தவிர எழுதுகோல் பிடித்தோர் வெறுக்கிறார்கள்!

இந்நிலையில் இந்தப் இழிசெயலில் இன்னும் பல கோடிகளைப் பாழ்படுத்தத்தான் வேண்டுமோ? இதனினும் மேலான துறை எதும் இல்லையா—இத் தொகையை ஈடுபடுத்த?

இன்றைய தினம் பஞ்சைகளாய்—பராரிகளாய்த் திரிந்து கொண்டிருக்கிறார்கள் படித்தவர்கள். எட்டுக்குக் கோட்டி அழுத தொகைக்கு எருமைப்பண்ணை வைத்திருக்கலாமே என்று அழும் பட்டதாரிகள்—படியேறிக் களைத்தவர்கள்—தடித்த நாக்குக்காரர்களால் துரத்தப்பட்டவர்கள்—அடியுதைபட்டு ஆண்டிக்கோலம் ஏற்றவர்கள்—'நாற்பது கோடி நாட்டில்' சில கோடியாவது இருக்கும்!

இந்திய உபகண்டத்திலே சென்ற ஆண்டு முடிவில் **11,80,000** பேர் வேலை தேடிப் பதிவு செய்து கொண்டார்களாம்—இந்தத் தகவலை டெல்லிப் பாராளுமன்றத்தில் கனம் கல்வி அமைச்சர் பெருமிதத்துடன் வெளியிட்டிருக்கிறார்.

இதுமட்டுமல்ல; பெருமைமிகு சென்னை அரசாங்க வேலை தேடித்தரும் அலுவலகக் கணக்கேட்டிலே 1958 முடிய வேலை தேடித் திரிபவர்களின் பட்டியல் இது:

மூன்றும் படிவம் படித்தோர்	8,003
நான்காம் படிவம் படித்தோர்	4,017
ஐந்தாம் படிவம் படித்தோர்	13,560
பள்ளி இறுதி வகுப்பு படித்தோர்	27,121
மெட்ரிக்குலேஷன் படித்தோர்	68
இண்டர்மீடியட் படித்தோர்	1,591
பீ. ஏ. பட்டதாரிகள்	1,266
பி. எஸ்ஸி. பட்டதாரிகள்	540
எம். ஏ. பட்டதாரிகள்	225
எம். எஸ்ஸி. பட்டதாரிகள்	6

—இப்படியாக அரை லட்சத்துக்கு மேலானவர்கள் கடும் வெய்யிலிலும் மழையிலும் தாங்கள் கற்ற கல்வியை நனைத்தும் உலர்த்தியும் காலமோட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

கணக்கிலே வந்த தொகைதான் இவை. இதைவிடப் பன்மடங்கு எண்ணிக்கையினர்—அரசாங்கத்தின் வேலைத் தேடி தரும் இலாக்காவை நம்பாதவர்கள்—சொந்த முயற்சி எனும் தடியூன்றித் தள்ளாடியபடி அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலைதான் இந்திய உபகண்டம் முழுவதிலும் நிலவுகிறது—என்று ஒப்புக்கொள்கிறார் பிரதமர் நேருகூட.

"இப்போது நாடு முழுதிலும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.... ஆனால் நாடு முன்னேற முன்னேற புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படலாம்...."

—இலட்சுமணபுரியிலே மாணவர்களுக்கு மத்தியிலே இந்தப் பேருண்மையை எடுத்துக் காட்டி வருந்தியிருக்கிறார், நம்மை ஆள வந்தவர்.

நாட்டிலே பசி, பட்டினி, பஞ்சத்தை மட்டுமல்ல; இந்த வேலையில்லாக் கொடுமை உற்பத்தி செய்திருப்பது. பிழைக்க வழி இல்லாமை காரணமாக சூழ்நிலைக்குப் பலியாகி, கொலை, கொள்ளை வழக்குகளில் ஈடுபட்டுவிடும் எத்தனையோ இளைஞர்களை வழக்கு மன்றங்கள் சந்தித்திருக்கின்றன!

அத்தகையோருக்கு உதவிடவோ—வழிகாட்டவோ புதிய திட்டங்கள் எதையும் தீட்டும் திராணியற்றவர்கள் இந்தி மொழிப் பயிற்சிக்குக் கல்லூரிகள் கட்டுவானேன்? மானியங்கள் தருவானேன்? கோடி கோடியாகக் கொட்டியழுவானேன்?

ஆகவே, மத்திய அரசின் இந்தி ஆதிபத்திய வெறியின் திரை மறைவுச் சூது திட்டம் பணத்தைப் பாழாக்குவதை நல்லவர் இதயங்கள் அனுமதிக்க மறுக்கின்றன.

உள்ள மொழி கற்றவர்களே காற்றிலே பஞ்சாகப் பறக்கிறார்கள்!

இனிப் புதுமொழி ஒன்று அவசியம்தானா? அதற்கு இத்தகைய தீய திட்டங்கள் தேவைதானா?

நாட்டிலே நடைபெற வேண்டிய நல்ல திட்டங்கள் பல பல இருக்க, நல்ல உள்ளம் கொண்டவர்களாலும், நாட்டு வரலாற்றைப் படித்தவர்களாலும் மிக மிகக் கடுமையாக ஆட்சேபிக்கப்படுகிற வடமொழியெனும் செத்த, அழுகிய தாயின் வயிற்றிலிருந்து அறுத்தெடுக்கப்பட்ட குறைமாதக் குழந்தையாம் இந்திக்கு **100** சதவீதம் மான்யம் தரப் போகிறார்களாம்!

இடிந்து விழும் கோபுரம்—

இற்றுவிழும் நெடுமரம்—

அணையப் போகும் சுடர்—

அழியப்போகும் ஆதிக்கம்—

—இவைகளைத்தான் இந்தி ஏகாதிபத்தியத்தின் இந்த வெறிச் செயல் நினைவுபடுத்துகிறது!

தேசீயம் பிள்ளை ..

[1—ம் பக்கத் தொடர்ச்சி]

முடியாத ஒரு உணர்ச்சி கொந்தளித்து எழுந்துவிட்டது.

"அழகுப் பதுமையே! ஆரணங்கே! தேடக் கிடைக்காத திரவியமே! தேன்மொழியே! தித்திக்கும் கனியே! தெள்ளமுதே! அருகே வா!" என மயக்கத்தில் உளறினர். அவளும் அருகே வந்தாள். இருவரும் தழுவிக் கொண்டனர். ராணுவத் தளபதி கண்களை மூடிக் கொண்டு வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

இசை நின்றது. இன்பப் போதையில் தேசீயம் பிள்ளை மிதந்தார். நெடுநேரங்கழித்து ஆகாஷ்வாணி பிரியமுடியாமற் பிரிந்து சென்ருள்.

திடீரென தாரை தப்பட்டை சங்குகளின் முழக்கம் கேட்டது. அதனைத் தொடர்ந்து எமதர்மன் விருந்து மாளிகைக்குள் நுழைந்தான்.

"என்ன தேசீயம் பிள்ளை! உபசரிப்புக்கள் எல்லாம் சரிவர நடந்ததல்லவா?"—எமன் கேட்டான்.

"ஆகா! நன்ருக நடந்தது. உபசரிப்பின் உச்ச கட்டமே ஆகாஷ்வாணியின் பிரவேசம் தான்! ஆகா! ஆகா! வர்ணிக்கவே முடியாது!" — தேசீயம் பிள்ளை உற்சாகத்தோடு பதில் கூறினர்.

"உம்மோடு நீண்ட நேரம் பேட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தும் நிறைவேற இயலாது போய் விட்டது. குறுகிய காலத்திலேயே நமது பேட்டி முடியும்!" எனக் கூறிய எமன், தளபதியைப் பார்த்து, "நீர் உடனே சென்று இன்று நமது சபை கூடுவதற்கு வசதியில்லை; ஏனெனில், 'வரி'யைப்பற்றிய விளக்கம் தெரியாமல் கூடிப் பயனில்லை — ஆகவே நாளைக் காலையில்தான் சபை கூடும் என்று அறிவித்துவிடும்" என ஆணை பிறப்பித்தான்.

தளபதியும் உடனடியாக சிரசாசனம் செய்து வணக்கம் தெரிவித்து விட்டு அதை விட்டு அகன்ருன். எமன், தேசீயம் பிள்ளை பேட்டி துவங்குகிறது.

எமன்: உமது தந்தையின் பெயர் என்ன?

தேசீயம் பிள்ளை: இது தெரியாதா? ஹியூம் என்ற பிரசித்தி பெற்ற ஆங்கிலேயப் பிரபுதான் என் தந்தை!

எமன்: ஆங்கிலேயரின் மகனு நீ? பிறகு எப்படி உனக்குத் தேசீயம் பிள்ளை என்று பெயர் வந்தது?

தேசீ: மகாத்மா காந்தி என்னை எடுத்து வளர்த்தார். அவர் வைத்த பெயர் தேசீயம் பிள்ளை!

எமன்: உங்கள் நாட்டில் கீரிப் பிள்ளை என்பது யார்?

தேசீ: அது ஒரு பிராணி! பாம்புக்கு விரோதி!

எமன்: நீரும் பிள்ளைதானே; நீர் யாருக்கு விரோதி!

தேசீ: ஹி ஹி ஹி!....

எமன்: தென்னம் பிள்ளைகூட உங்கள் ராஜ்யத்தில் உண்டல்லவா?

தேசீ: ஆமாம்; அதுதான் பூலோகத்துக் கற்பக விருட்சம்!

எமன்: ஒரு பிள்ளை, பிராணி! இன்னொரு பிள்ளை, மரம்! சரி; போகட்டும் — அணில் பிள்ளை என்பது என்ன?

தேசீ: அதுவா? அதுதான் ராமருக்காகப் பாலம் கட்டிய ஜந்து!

எமன்: ஓ! உங்க நாட்டிலே அணில் கூட பாலம் கட்டும்! ஆனுல் அரசாங்கம்தான் கட்டாதோ?

தேசீ: ஹி ஹி ஹி ஹி!

எமன்: இருக்கட்டும்! கிளிப் பிள்ளை என்ருல் என்ன?

தேசீ: அதுவா; அது சொன்னதையே சொல்லும் ஒரு பறவை!

எமன்: என்ன சொல்லும்— "ஆகட்டும்; பார்க்கலாம்! ஆகட்டும்: பார்க்கலாம்!" என்றுதானே?

தேசீ: ஹி ஹி ஹி!

எமன்: தேசீயம்பிள்ளை என்கிறீரே; நீர் இந்த நான்கு பிள்ளைகளைவிட எந்த விதத்தில் உயர்ந்தவர்?

தேசீ: நான் உயர்திணை! அவைகள் அஃறிணைப் பிராணிகள்! வெறும் உயிர்கள்! பகுத்தறிவு இல்லாத ஜந்துக்கள்!

எமன்: பகுத்தறிவு என்ருல் என்ன?

தேசீ: சிக்கலான கேள்வி! பூலோகத்திலே அந்தக் கழகத்துக்காரர்கள் என்னைப் பார்த்துக் கேட்கும் கேள்வியைத் தாங்களும் கேட்கிறீர்கள்—செத்தும் விடவில்லையே எனக்குச் சங்கடம்?

எமன்: செத்துவிட்டீரா? யார் சொன்னது அப்படி? பொய் சொல்லாதீர்! வெறும் பார்வையாளராகத்தான் இந்த நாட்டுக்கு வந்திருக்கிறீர். இந்த நாட்டுப் பிரஜையாக உம்மை யாரும் அங்கீகரிக்கவில்லை! உம்முடைய நடவடிக்கைகளையும், பூர்வோத்திரத்தையும் பார்த்துத்தான் உம்மை இந் நாட்டுப் பிரஜையாக்குகிற விவாதத்தைச் சபையிலே கொண்டு வரவேண்டும்! அதிருக்கட்டும்; முதலில் வரியைப் பற்றிய விளக்கத்தைச் சொல்லும்!

தேசீ: 'வரி' என்ருல் எங்கள் ராஜ்யத்தில் காங்கிரஸ் என்று அர்த்தம்!

எமன்: காங்கிரஸ் என்ருல்?

தேசீ: தியாகம் என்று அர்த்தம்!

எமன்: தியாகம் என்ருல்?

தேசீ: பதவி, பர்மிட், லைசென்ஸ் இப்படிப்பல அர்த்தங்கள்!

எமன்: சரி; வரி யென்பது கருப்பு நிறமா? சிவப்பு நிறமா? அதன் உண்மை நிறமென்ன?

தேசீ: வரிக்கு ஒரு நிறமா? இரு நிறமா? அது பஞ்ச வர்ணங் கொண்டதல்லவா?

எமன்: பஞ்சம் என்ருல் தரித்திரம் என்பார்களே?

தேசீ: ஆமாம்—அதே நிறந்தான் வரியின் நிறமும்!

எமன்: சரி — வரியினுல் என்ன நன்மை?

தேசீ: மக்கள் பெருக்கம் குறையும்; நாட்டில் ஜன நெருக்கம் தேய்ந்து கலகலப்பாக இருக்கும்!

'தனி அரசு'

5; வில்லேஜ் ரோடு,
சென்னை — 6

தினசரியின் முதல் இதழ்
15—3—59 காலையில்
சென்னையில்,
16—3—59 காலையில்
வெளியூர்களில் கிடைக்கும்!

எமன்: அப்படிப்பட்ட வரியை எமலோகத்திலும் அமுலுக்குக் கொண்டு வந்தால்....?

தேசீ: இங்கும் நெருக்கடி குறைய வழி ஏற்படும்.

எமன்: உங்கள் ராஜ்யத்தில் வரி போடுவதில் வல்லவர்கள் யார்?

தேசீ: நானேதான்! நான்தான் இங்கு வந்து விட்டேனே?

எமன்: குறிப்பாக எந்தெந்தப் பொருள்கள்மீது வரி போடலாம்?

தேசீ: அழுகும் பொருள்களின் மீது வரிபோடுவது சாலச் சிறந்தது!

எமன்: எங்கள் நாட்டில் அழுகும் பொருள்கள் என்ன? (யோசித்து) ஓ! பிணங்கள்! பிணங்கள்!! வரி போடலாம்!

[பேட்டி முடியவில்லை; தொடரும்]

எமது வெளியீடுகள்

மு. கருணாநிதி M.L.A.,
உதயசூரியன் ரூ. 1-50
தேனலைகள் ரூ. 1-50
மணிமகுடம் (அச்சில்)
(2-ம் பதிப்பு)

சி. பி. சிற்றரசு
ரோம் நாட்டு வீரன் ரூ. 1-50

"முரசொலி" மாறன் M.A.,
ஏன் வேண்டும் இன்பத்திராவிடம்? ரூ. 1-50

பி. சி. கணேசன் B.Sc., B.T.
அபிசீனிய அடிமை ரூ. 1-00
எழுத்தாளன் காதலி ரூ. 1-25

ரா. வேங்கடசாமி
உயிரை வாங்கிய உயில் ரூ. 1-25

முத்துவேல் பதிப்பகம்
77, மதுரைசாலை, திருச்சி 8

முள்ளு முனையில்—மூன்று குளம்!

[4—3—59 அன்று, சென்னை சட்ட மன்றத்தில் நிதிநிலை அறிக்கையின்மேல் நடைபெற்ற விவாதத்தின்போது ஆசிரியர் மு. க. ஆற்றிய உரை இது.]

மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே!

நமது நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் எட்டாவது முறையாக வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையின்மீது மூன்ருவது முறையாக நான் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்ததற்கு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டம் வரிகள் இல்லாத திட்டம், உபரியைக் காட்டுகிற திட்டம் என்று ஆளுங் கட்சி அங்கத்தினர்கள் வெகுவாகப் புகழ்ந்து பேசியிருக்கிருர்கள். அந்தப் புகழ்பாடுவதில் எதிர்க்கட்சியில் உள்ள அங்கத்தினர்களும் பங்குகொள்ள வேண்டுமென்று அந்தப் பக்கத்தில் உள்ளவர்கள் பேசிய போதெல்லாம் சுட்டிக் காட்டப்பட்டது. வரியில்லாத நிதிநிலை அறிக்கை யென்று மகிழ்ச்சி அடைவதைவிட வரி விலக்கு செய்யப்பட்டிருக்கிறது என்று ஒரு வரி அறிக்கையிலே காணப்படுமேயானல் அப்படி அடைகின்ற மகிழ்ச்சியே பொருளுடையதாகும். 'பாராட்டுங்கள் பாராட்டுங்கள்' என்று நேற்றைய தினம் பேசிய சௌந்தரம் அம்மையார் அவர்கள் உட்பட அனைவரும் கேட்டுக் கொண்டார்கள். இந்த அறிக்கை பாராட்டுக்குரியதாக இல்லை. வரிவிலக்கு இருந்தால் ஒருவேளை பாராட்டுக்குரியதாக இருந்திருக்கும்.

மாமன்றத்திலே முரண்பட்ட ஒலி களா?

கவர்னர் பெருமான் உரை 4—2—59-ல் நிகழ்த்தப்பட்டது. அவர் உரையில் "இந்த ஆண்டு பருவநிலை பரவாயில்லை எனலாம்" என்று குறிப்பிட்டிருக்கிருர். அடுத்து ஒரு மாதத்திற்குப் பிறகு 2—3—59—ல் கனம். நிதி அமைச்சர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது "இவ்வாண்டின் பருவநிலை மோசமெனத்தான் கொள்ள வேண்டும்" எனக் குறிப்பிட்டிருக்கிருர்.

இப்படி ஒரு மாதத்திற்குள் இரண்டு வித அபிப்பிராயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு உரைகளும் ஒரே இலாக்காவினரால்தான் தயாரிக்கப்படுகின்றன. பருவநிலை பரவாயில்லை யென்று கவர்னர் அவர்களும், பருவநிலை மோசமென்று நிதியமைச்சரும் குறிப்பிடுவது விந்தையிலும் விந்தையாக விசித்திரமாகத்தான் தோன்றுகிறது.

புள்ளி விபரம் தடுமாறுகிறது!

அடுத்து கவர்னர் உரையில் இந்த ஆண்டு 1200 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் என்றும், மொத்தம் 8000 கிராமங்கள் மின்சார வசதி பெறும் என்றும் குறிப்பிடுகிருர். நிதி அமைச்சரோ, அடுத்த ஆண்டு ஆயிரம் கிராமங்கள் மின்சார வசதி பெற்று, மொத்தம் மின்சார வசதி பெற்ற கிராமங்கள் ராஜ்யத்தில் 9000 வரை உயரும் என்கிருர்.

நிதியமைச்சர்: (குறுக்கிட்டு) அங்கத்தினருக்குக் கூட்டல் கழித்தல் தெரியும் என்று நினைத்தேன்.

கருணாநிதி: எனக்கு கூட்டல் கழித்தல் நன்ருகவே தெரியும். அமைச்சர் தான் யாருக்குக் கீழே அமைச்சராய் இருக்கிருர் என்பதை மறந்து விட வேண்டாமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கவர்னர் குறிப்பிடும் 8000 கிராமங்களையும் சுட்டிக்காட்டி விட்டு அடுத்த ஆண்டு 9000 கிராமங்கள் மின்சார வசதி பெறும் என்ற நிலையைக் குழப்பமில்லாமல் விளக்கம் கொடுத்திருந்தால் நன்ருக இருந்திருக்கும். அதற்கு வேண்டிய விளக்கம் தரப்படாமைக்கு வருந்துகிறேன். அவருடைய அறிக்கையின் வாசகங்களை வைத்துத்தான் நான் பேச வேண்டியிருக்கிறது. ஏற்கனவே இருக்கக் கூடிய கிராமங்களுடன் கவர்னர் சொல்லியிருக்கக் கூடிய எண்ணிக்கையையும் சேர்த்து இன்னும் ஆயிரம் கிராமங்களுக்கு அடுத்த ஆண்டில் மின்சார வசதி கிடைக்கும் என்று தெளிவாகச் சொல்லியிருக்க வேண்டும் என்பதைத்தான் சுட்டிக் காட்ட விரும்பினேன்.

பட்டியலைக் காட்டிப் பயனென்ன?

நிதிநிலை அறிக்கையில் அமைச்சர் புள்ளிவிவரங்களை அள்ளி வீசியிருக்கிருர்.

புள்ளிவிவரங்களைக் காட்டினல் போதுமா? கொடுக்கப்பட்டுள்ள மருந்துகளின் பட்டியலைக் காட்டுவதைவிட குணமாக்கப்பட்டுள்ள நோயாளிகளைக் காட்டுவதுதான் நல்ல டாக்டருக்கு அழகாகும் என்பதை உணர வேண்டும்.

அதிலும் இப்போது கொடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் சரியானவைகள்தானு? நம்பத் தகுந்த புள்ளிவிவரங்கள்தானு? —என்ற ஐயப்பாடு எழுகிறது.

58—59-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் "ராஜ்ய நிலையை மொத்தமாக மதிப்பிடும்போது 1956—57 ஆண்டில் இருந்த அளவு உற்பத்தி இல்லாத போதிலும்..." என்று குறிப்பிடப்படுகிறது.

அவர் இந்த ஆண்டு தந்துள்ள புள்ளிவிவரத்தை எடுத்துப் பார்த்தால், 1956—57—ல் 57·2 லட்சம் ஏக்கரா நிலம் சாகுபடி ஆகியிருக்கிறது. 1958—59—ல் 57·2 லட்சம் ஏக்கராதான் சாகுபடி ஆகியிருக்கிறது. அதேசமயம் 1956—57—ல் 31·96 லட்சம் டன்னும், 1958—59-ல் 32.98 லட்சம் டன்னும் அரிசி உற்பத்தி ஆகியிருக்கிறது எனக் குறிப்பிடுகிருர். 1958—59-ல் உற்பத்தி நிலைமை பெருகவில்லை யென்று கூறிவிட்டு, 59—60 அறிக்கையில் பெருகியிருப்பதாகப் புள்ளிவிவரம் காட்டவேண்டிய நோக்கம் என்ன? இந்தப் புள்ளிவிவரங்களில் எப்படி நாங்கள் நம்பிக்கை வைப்பது என்று கேட்கிறேன். இப்படி உற்பத்தியாகியும் விலைவாசிகள் விஷம்போல் உயர்ந்து கொண்டே தானிருக்கிறது. அதற்குக் காரணம் என்ன?

தேசிய மயம்—தெனுலிராமன் பூனை!

உணவு தானியங்களின் மொத்த வியாபாரத்தை சர்க்கார் எடுத்து நடத்தப் போவதாகச் சொல்லியிருக்கிருர்கள். எல்லாத் தொழில்களும் தேசிய மயமாக வேண்டுமென்ற கொள்கையுடையதுதான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்த முறையில் இந்த உணவு தானிய வியாபாரத்தையும் சர்க்கார் ஏற்று நடத்துவதில் தி. மு. க. வுக்கு எந்தவித ஆட்சேபணையும் கிடையாது. ஆனல், இப்போது சர்க்கார் எடுத்துக் கொண்டு நடத்தும் எந்தத் துறையைப் பார்த்தாலும் அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறதா என்று பார்த்தால் 'இல்லை' என்ற பதிலே கிடைக்கிறது. நிர்வாக ஊழல்களாலும், திறமையின்மையாலும், பொறுப்பற்ற முறையில் அதிகாரிகள் நடந்து கொள்வதாலும் அவைகள் நல்ல முறையில் நடைபெறவில்லை.

தெனுலிராமன் பூனை வளர்த்த கதையைப்போல் இருக்கிறது, இந்த சர்க்காரின் தேசிய மயமாக்கும் திட்டமும் கொள்கையும்! பூனை வளர்ப்பதற்காகத் தரப்பட்ட பொன் மூட்டையை செலவழிக்காமல் வைத்துக் கொள்வதற்காக சூடான பாலைப் பூனைக்கு வைத்து அதைக் குடித்த பூனையின் உதட்டைக் கருக்கி விட்டானும். மறுநாள் குளிர்ந்த பாலை வைத்தாலும் பூனை அதைக் குடிக்க வரமாட்டேன் என்று மறுத்துவிட்டதாகக் கதையொன்றுண்டு!

அதைப்போல் தேசிய மயமாக்குகிற திட்டங்களில் — சர்க்காரே ஏற்று நடத்துகிற தொழில்களில் பொறுப்பற்ற தன்மையும் ஊழல்களும் வளர்ந்து வருவதைப் பார்க்கும்போது, தேசிய மயமாக்கும் திட்டமே தேவையில்லை யென்று தெனுலிராமன் பூனையைப்போலப் பொதுமக்கள் கூறிவிடுவார்களோ என்ற பயம் ஏற்படுகிறது. இத்தகைய முடிவுக்கு மக்கள் தள்ளப்படுவார்களேயானல் அதற்கு சர்க்காரே பொறுப்பு என்பதுதான் என் கருத்து.

பாதிக் கிணறு தாண்டும் பண்பு வேண்டாம்!

அது மாத்திரமல்லாமல், கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டபடி 2 லட்சம் டன் தானியத்தை மட்டுமே சர்க்கார் கொள்முதல் செய்து வியாபாரம் செய்வது என்று முடிவு செய்வது எங்களால் கண்டிக்கப்படக் கூடியது. பாதிக் கிணறு தாண்டுவது போலத்தான் இந்த 2 லட்சம் டன் உணவு தானியத்தை சர்க்கார் கொள்முதல் செய்து வியாபாரம் செய்வது என்பதாகும். மொத்தத்தில் எடுத்து, பொறுப்புள்ள அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து, நிர்வாக ஊழல் மலியாத நிலையில் அந்த வியாபாரத்தை நடத்த வேண்டுமென்று நான் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுவாக சர்க்கார் எடுத்து நடத்தும் காரியங்கள் எதுவாக இருந்தாலும், "முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டினேன்; இரண்டு குளம் பாழ்; ஒரு குளத்தில் தண்ணீர் இல்லை!" என்ற கதையாகத்தான் முடிகிறது.

விதைப் பண்ணைகளை அமைக்கும் விஷயத்தில் அந்த முடிவைத்தான் நாம் காண்கிருேம். 360 விதைப் பண்ணைகளை 1959—60-ம் ஆண்டுக்குள் இந்த நாட்டில் வைத்துக் காட்டப் போகிருேம் என்று பெருமிதத்தோடு இதே மாமன்றத்திலே கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் "360 விதைப் பண்ணைகளை அமைக்க முயன்று, சில பலவற்றைக் கைவிட்டு, சில பலவற்றை மூடி, 130 விதைப் பண்ணைகளை நடத்தத் தயாராக இருக்கிருேம்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆக 130 விதைப் பண்ணைகளை அமைத்து, அவற்றைக் கட்டிக் காப்பாற்றினல் போதும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிருர்கள். வைக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதோ 360 பண்ணைகள். ஆனல், வைக்கத் தயாராக இருப்பது 130 பண்ணைகள்தான். விதைப் பண்ணைகளில் இவர்கள் எதிர்பார்த்த விளைவின் அளவு மாத்திரம் 1325 டன். ஆனல் சோககரமான, புள்ளி விவரம் என்ன கூறுகிறது? 977 டன்தான் விதைப் பண்ணைகளிலிருந்து அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் வரவில்லை. மொத்தமாகப் பார்த்தால் விதைப் பண்ணைகளால் ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் ரூபாய்க்குமேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கும் என்று நமக்குத் தெரியாமல் இல்லை. நெடும்பலத்தில் ஒரே ஒரு பண்ணையில் மாத்திரம் செலவிடப்பட்ட தொகை 25.837 ரூபாய். அதிலிருந்து கிடைத்த வருமானம் சுமார் 14,549 ரூபாய் என்றும், கிட்டத்தட்ட அதில் 11,288 ரூபாய் நஷ்டம் என்றும் கேள்விப்படுகிற நேரத்தில், உள்ளபடியே சர்க்கார் திட்டமிட்டுச் செய்கின்ற காரியங்கள் எல்லாம் சரிவர நடைபெறுகின்றனவா என்று பார்த்தால் இல்லையென்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே, இவ்வாறு போடுகின்ற திட்டங்களில் இந்த நாட்டு மக்களுக்கு எவ்வாறு நம்பிக்கை ஏற்படமுடியும் என்று கேட்க விரும்புகிறேன்

நெல் சராசரி விளைச்சல் அதிகரித்துக் கொண்டே போகிறது என்பதற்கு அமைச்சர் அவர்கள்

மு. கருணாநிதி

[அடுத்த பக்கம் பார்க்க]

வரி இல்லாத திட்டமாம்-எனினும் வாழ்த்த முடியவில்லையே!

கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களைப் பார்த்தால், அதில் ஏக்கர் ஒன்றுக்கு 1955—56—ல் 1,214 பவுண்டுகள், 1956-57-ல் 1,255 பவுண்டுகள், 1957-58-ல் 1,300 பவுண்டுகள் விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்றும் பிரமாதமான உயர்வைக் காட்டவில்லை. இதே அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு கூறும்போது, ஜப்பான் நாட்டில் ஏக்கர் ஒன்றுக்கு 2550 பவுண்டு விளைகிறது என்றும், சீனத்தில் 1550 பவுண்டு விளைகிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அத்தகைய நிலையை எட்ட இங்கே—இந்த மாமன்றத்திலே இருக்கிற அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டும். அதற்காக என்ன முயற்சி எடுத்துக் கொள்ள இருக்கிறார்கள் என்பது பற்றி அமைச்சர் அவர்கள் அவருடைய அறிக்கையிலே ஒன்றும் குறிப்பிடவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

குடகனாறு திட்டம் எங்கே?

நீர்ப்பாசன வசதிக்கான திட்டங்கள் ஏராளமான அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று புள்ளிவிவரம் கூறுகிறது. நான் இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிற நேரத்தில் எல்லாம் சொல்லி வருகிறேன்—என்னுடைய குளித்தலைத் தொகுதியில் குடகனாறு திட்டம் நிறைவேறுமானால் 7, 8 ஏரிகளில் தண்ணீர் நிரம்ப வழி ஏற்படும். அந்தத் திட்டம் மிகச் சிறிய திட்டம்தான். 10 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படக்கூடிய திட்டம். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால், வறண்டு கிடக்கும் பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைப்பதின் காரணமாக அங்குள்ள மக்களுக்கு வளமும், வாழ்வும் ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையின் 29—ம் பக்கத்தில் "மேலும் எந்தத் துறையிலாவது திட்டத்தை விரிவாக்கும் அவசியம் ஏற்படுமேயானால் அதற்கான நிதியை வழங்குவதில் சிரமம் இருக்காது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்" என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த ஒரு வார்த்தையை என்னுடைய ஆயுதமாக வைத்துக் கொண்டு, அமைச்சர் அவர்களை குளித்தலைத் தொகுதியில் குடகனாறு திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் திட்டங்களை விரிவாக்குவதற்கு நிதி அளிப்பதில் சிரமம் இருக்காது என்று கருதுகிற காரணத்தால், நீங்கள் குடகனாறு திட்டம் சிரமம் இல்லாத அளவில் நிறைவுற உங்கள் நிதியைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இருக்கும் திட்டங்களுக்கும் இல்லையே உரிமை!

பெரும் தொழில்களை நாம் அபிவிருத்தி செய்கிறோம் என்பதை எடுத்துக் காட்ட புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு பெரிய திட்டங்களைப் பற்றி குறிப்பிடுகிறார்கள். ஒன்று நெய்வேலித் திட்டம்—இன்னொன்று பெரம்பூர் ரெயில்வேப் பெட்டி செய்யும் தொழிற்சாலை!

இந்த இரண்டும் இந்த அரசாங்கத்திற்குச் சொந்தமானவையா? இந்த இரண்டின் நிர்வாகப் பொறுப்பு யாரிடம் இருக்கிறது? இவையிரண்டும் வடக்கத்தி சர்க்காருக்கு உரிமையானவை. நெய்வேலித் திட்டத்தில் கிடைக்கிற லாபத்தில் 25 சதவிகிதம்தான் தமிழகத்திற்குக் கொடுக்கப்படுகிறது என்பதை நான் வெட்கத்தோடும் வேதனையோடும் குறிப்பிட விரும்புகிறேன். 65 சதவிகிதம் வெளிநாட்டிலிருந்து வரும் சாமான்களைக் கொண்டு பெட்டிகள் கோக்கப்படுகின்றன, பெரம்பூரில்! இந்த நிலைமையில் இரண்டு பெரிய தொழில்கள் என்று சொல்லப்படுவதும் கூட வடக்கத்தி சர்க்காரிடம் இருக்கிறது. நீங்கள் தொழில் வளர்ச்சியடைந்து விட்டது என்பதற்காகக் காட்டக்கூடிய புள்ளி விவரங்கள் பூராவும் தனியார் துறையில் இருக்கும் தொழில்களைப்பற்றிக் கூறப்படும் விவரங்கள். சமதர்ம சமுதாயத்தை நிறுவப் போகிறோம் என்று சொல்லுகிற நீங்கள்—சோஷலிச பாணியில் சமுதாயத்தை நோக்கி நடைபோடுகிறோம் என்று கித்தாப்புக் கொள்கிற நீங்கள்—தனியார் துறை பற்றிய புள்ளிவிவரத்தைச் சொன்னால் சமதர்மத்தின் உச்சியை அடைந்தவர்கள் ஆகிவிடுவீர்களா — என்று கேட்க விரும்புகிறேன்.

வடக்கே வளத்தைத் தரக்கூடிய பெரும் தொழிற்சாலைகள்—ரூர்கேலா இரும்புத் தொழிற்சாலை, பிலாய் உருக்குத் தொழிற்சாலை, துர்காபூர் தொழிற்சாலை—என்று ஆரம்பித்துக் கொண்டே இருக்கிறார்கள். அங்கு எத்தனையோ கோடிக்கணக்கான ரூபாயில் திட்டங்கள் போடப்படுகின்றன.

அப்படி இருக்கும்போது நம்முடைய தமிழகத்திற்கு இந்த இரண்டு திட்டங்கள் போதுமா? நம்முடைய நாடு வஞ்சிக்கப்படவில்லையா என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தட்டிகள் வைத்துத் தடுப்பீரோ இழிவை?

சேரிகளைத் திருத்துவதற்காகச் செலவிடப்படுகின்ற தொகை நிச்சயமாகப் போதுமானதாக இல்லையென்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுடைய கண்களில் சேரிகளை மறைப்பதற்குத்தான் இந்தத் தொகை செலவழிக்கப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து கனா நாட்டுப் பிரதமர் வந்தாலும், மார்ஷல் டிட்டோ வந்தாலும், எடின்பரோக் கோமகன் வந்தாலும், அவர்களைத் தெருவிலே உலா வரச் செய்கிற நேரத்தில் — அவர்கள் பவனி வருகிற நேரத்தில் நம்முடைய அரசாங்கத்திற்குப் பல தட்டிகள் தேவைப்படுகின்றன. சாலைகளின் பக்கத்தில் இருக்கும் சேரிகளை, தட்டிகளைக் கட்டி மறைத்து வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் கண்களில் நம்முடைய சேரிகள் படாமல் காக்கிறார்கள். அந்தத் தட்டிகளை நான் திருச்சிக்குச் சென்றிருந்தபோது பார்த்தேன். அப்பொழுது மார்ஷல் டிட்டோ பவனி வருவதாக இருந்தது. சிந்தாமணி என்ற பகுதியில் பார்த்தால் அரைப் பனைமர உயரத்திற்கு மூங்கில் தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அவ்வாறு ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு அந்தப் பகுதியில் ஆதித் திராவிடப் பெருமக்களின் சேரிகள் இருப்பதாகவும், சாக்கடை ஓரத்தில் அந்தச் சேரிகள் அமைந்திருப்பதாகவும், அவைகள் மார்ஷல் டிட்டோவின் கண்களில் படாமல் இருப்பதற்காகத்தான் அந்தத் தட்டிகள் கட்டப்பட்டிருப்பதாகவும் கூறினார்கள். இந்தமாதிரி தட்டிகளைக் கட்டி வைத்துவிட்டு, மார்ஷல் டிட்டோவை அழைத்து வந்து, "இதைப் பார்; அதைப் பார்; எங்கள் எழிலான நாட்டைப் பார்" என்று கித்தாப்புக் கொட்டுகிறார்கள். உள்ளபடியே இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை, சேரிகளின் சீரமைப்புக்குப் போதுமான தொகை அல்ல என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1958—59-ம் வருடத்தில் ஹரிஜனப் பள்ளி மாணவர்களுக்காக மத்தியான உணவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 27 லட்சம் ரூபாய். இப்பொழுது இந்த வகையில்—மத்தியான உணவுக்கு மாத்திரமல்லாமல் உணவு விடுதிக்கும் சேர்த்து ஹரிஜன மாணவர்களுக்காக செலவழிக்கப்படும் தொகை 19 லட்சமாக ஆகி இருக்கிறது. இவ்வாறு 27 லட்சத்திலிருந்து 19 லட்சமாகக் குறைந்திருப்பதற்கு இந்த அரசாங்கத்தை நாம் பாராட்ட வேண்டுமா?

சாய்ந்துபோகும் சமுதாய நலத் திட்டம்!

கடைசியாக, சமுதாய நலத் திட்டத்தைப் பற்றிப் பார்ப்போமேயானால், அது சர்க்கார் கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் அணுகப்படுகிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கம்யூனிஸ்ட் கட்சியினர் பகுதியிலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகப் பகுதிகளிலும் சரி, மற்றும் பொதுவாக எதிர்க் கட்சியினர் பகுதிகளில் அவர்களுடைய ஆய்வுரைகளையோ, ஆலோசனைகளையோ இந்தச் சமுதாய நலத் திட்ட சம்பந்தமாக ஏற்றுக் கொள்வதில்லை.

ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். கோபியிலே திராவிட முன்னேற்றக் கழக மாநாடு சில காலத்திற்குமுன் நடைபெற்றது. அதற்குப் பின்னர் காங்கிரஸ் கட்சி மாநாடு கோபியிலே நடைபெற்றது. அந்த காங்கிரஸ் கட்சி மாநாட்டிற்காக ஹைவேஸ் டிபார்ட்மெண்ட் செலவழித்த தொகையின் புள்ளிவிவரத்தை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கோபியை இணைக்கும் ஈரோடு—சத்தியமங்கலம் ரோடு செப்பனிடுவதற்காக 20,000 ரூபாய்; கோபி—தாராபுரம் ரோடு செப்பனிட 10,000 ரூபாய்; கோபி—சவுந்தாபூர் ரோடு செப்பனிட 10,000 ரூபாய்; தனிப்பட்ட பழுதுபார்க்கும் வேலைகள் ஈரோடு—சத்தி சாலையில் செய்ய 60,000 ரூபாய்; கோபி—தாராபுரம் பாதையில் தனிப்பட்ட பழுதுபார்க்கும் வேலைக்காக 20,000 ரூபாய்; சத்தியமங்கலம்—மேட்டுப்பாளையம் பாதை தனி ரிப்பேர்களுக்காக 73,000 ரூபாய்—ஆக இரண்டு இலட்சத்து நாற்பத்தெண்ணாயிரத்து இருநூறு ரூபாய் செலவில் அவசர அவசரமாகத் திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கூறி என் உரையை முடித்துக்கொள்றேன்.

அண்ணலடியார்களின் ஆளும் லட்சணம்!

★

நாற்பது கோடி மக்களைப் பரிபாலிக்கிற டில்லிப் பாராளுமன்றத்தில், நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது மந்திரிகளின் மஞ்சத்தில் சில துணை அமைச்சர்களைத் தவிர, வேறு எந்த அமைச்சரும் காணப்படவில்லையாம்!

இதை ஒட்டி அவைத்தலைவர் திரு. அனந்தசயனம் "ஓரிரு துணை அமைச்சர்களைத் தவிர வேறு அமைச்சர்களைக் காணோம். மிக முக்கியமான நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தை அமைச்சர்கள் அசட்டை செய்வதின் பொருள் என்ன? நாம் என்ன இங்கு செய்யப்போகிறோம்" — என்று **உரத்த** குரலில் கூவினாராம்!

அவைத்தலைவரிடமிருந்து ஏன் இந்த உரத்த குரல்?

இதுதானா ஆளும் லட்சணம்?

"அதோ இலட்சிய விளக்கு!

"ஆணவக்காரர்களால் இருட்டாக்கப்பட்டிருக்கும் நம் விடுதலைப் பாதையின் முடிவில் ஒளி விடுகிறதே, அதுதான்!

"ஓடிப்போய் அந்த ஒளியினைக் காணலாம், உவகை பெறலாம் என்றால் நம் கால்களும் கைகளும் 'ஒற்றுமைச் சட்டம்' என்கிற தளையால் கட்டப்பட்டிருக்கின்றன.

"இருந்தும், அந்த லட்சியத்தை அடைவதற்கான ஆர்வம் நம்முள்ளத்திலே கொழுந்து விட்டு எரிகிற காரணத்தாலே நடக்க முடியாவிட்டாலும், நாக்கு வரண்டு காய்ந்தாலும், நல்ல உடல் தேய்ந்தாலும் தரையிலே நெளிந்து நெளிந்தாவது லட்சியபுரியை நோக்கிப் பயணம் நடத்தவேண்டியவர்களாக இருக்கிறோம்!

மக்கள் அணி திரண்டது; மாடமாளிகைகளிலே மக்களின் வாழ்வைக் காகிதத்திலே கணித்து வந்த ஆளவந்தார்களுக்குப் 'பயப்பிணி' வந்தது!

நீர் மேற்குமிழிகளாய் இருந்த மக்கள், நீட்டிய துப்பாக்கிக்குப் பயப்படாது, நெஞ்சுயர்த்தி 'விடுதலை! விடுதலை!" என்று சங்கநாதம் செய்கிறார்களே, இருக்கட்டும், இருக்கட்டும். சூதுவலை பின்னி, இவர்களின் இலட்சியத்தைச் சின்னபின்னப் படுத்துவோம் என்ற வஞ்சக எண்ணத்தை நெஞ்சத்தின் ஆழத்தில் பதுக்கிக்கொண்டு, ஒருவித உபாயத்தைக் கையாண்டார்கள்.

அதன்படி ரொடீஷியா என்னும் இன்னொரு பிரிட்டிஷ் காலனிப் பகுதியுடன் நியாசாலாந்து இணைக்கப்பட்டது; 'பரந்த

வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் டாக்டர் பண்டா!

இருட்டு நாட்டில் ஓர் உதயசூரியன்! இனவுணர்ச்சிக்கோர் ஒளிவிளக்கு!

"பிறப்புரிமையுள்ள இந்தப் பயணத்தைத் தடுத்துவிட எண்ணம் கொண்ட பாதகர்கள் 'ஒற்றுமை, ஒற்றுமை' என்று கதறுகிறார்கள்!

"பிரிவினை வாதிகள் என்று நம்மைக் காட்டிக் கூவுகிறார்கள்.

"இவர்கள் 'ஒற்றுமை ஒற்றுமை' எனக் கூவினாலும், கதறினாலும், குய்யோ முறையோ என ஒப்பாரி வைத்தாலும், குழைந்து குழைந்து பேச வந்தாலும் நம் கொள்கைப் பயணம் நிற்காது; நொடியாது!"

—இந்த 'விடுதலைக் குரல்' தென்னக விடுதலை இயக்கக் குரலாகத் தென்படலாம்!

ஆனால் இது இருட்டுக் கண்டத்திலிருந்து எழுகிற உதய சூரியனின் குரல்!

விடுதலைத் தாகத்தால், வீணர்கள் சூழ்ச்சியால் பொறுக்கமாட்டாது கதறுகின்ற நீக்ரோ நாட்டின் 'போர்க் குரல்'! வணிகத்திற்குப்பின் வழக்கமாக வெற்றிக் கொடியை நாட்டி, அரசுக் கட்டில் ஏறுகின்ற வெள்ளையர்களின் சூது வலையினைச் சுக்குநூறுக்கும் நியாசாலாந்து எனும் ஆப்பிரிக்க நாட்டின் போர்முரசம்! 30 லட்சம் மக்களையும், 47 ஆயிரம் சதுரமைல் பரப்பினை கொண்ட நியாசாலாந்து, தென்னகத்திற்குத் தென்மேற்கேயுள்ள ஆப்பிரிக்காக் கண்டத்தின் நடுப் பாகத்தில் நியாசா ஏரிக்கரையில் பரந்து கிடக்கும் ஒரு அடிமை பூமியாகும்.

1953-வரை பிரிட்டிஷ் காலனியாக இருந்தது. மக்களின் உடலில் சூடே இல்லாத வண்ணம் இரத்தத்தை உறிஞ்சி உற்சாகம் கொண்டாடினார்கள், 'யூனியன் ஜாக்' கொடியேந்திய காலனி சர்க்கார். தங்கள் அடிமை நிலைமையையும், தரக்கேடுற்றவர்களின் ஆதிக்கத்தையும் உணர்ந்த நியாசாலாந்து மக்கள் 'விடுதலை யுணர்வு' எனும் இளஞ்சூட்டினை, குளிர்ந்தபோன தங்களின் இதயங்களிலே ஏற்றிக் கொண்டார்கள்.

டாக்டர் ஹேஸ்டிங்ஸ் பண்டா, எனும் தங்கள் தன்மானத் தலைவரின் அணியிலே, தூக்கிய புரட்சிக் கொடியுடனும், தூங்காத விடுதலை விழிப்புடனும் சேர்ந்தார்கள்.

தேசம்' ஆயிற்று; டொமினியன் அந்தஸ்தும் கிடைத்தது!

"டொமினியன் அந்தஸ்து கிடைத்துவிட்டது. இனி தேனும் பாலும் ஓடும், வீதிகளில்! சுபீட்சம் பொங்கும்! சுகம் மணக்கும்! சோகம் தலை காட்டாது!"—என்று ஆறுதல்மொழி கூறி மகிழ்ந்தனர் வெள்ளையர், இந்த நாட்டுத் 'தேசீயக் காங்கிரஸ் துரைத்தனத்தனம்' போலே! கூண்டுக் கிளிகளின் 'ஒற்றுமை வாழ்வைப்'போல் ரொடீஷியாவும் நியாசாலாந்தும் சிறிது காலத்திற்குள்ளேயே பெரும் மனக்கசப்படைந்தன!

தங்கள் பெயரால் வெள்ளையர்களே அனைத்தையும் ஆளுபவர்களாகவும், அனுபவிப்பவர்களாகவும் விளங்கியதை, நியாசாலாந்து மக்கள் கண்டு மனங் கொதித்தனர்.

ஒற்றுமையால் விளைந்த பயன், தாங்கள் மைனாரிட்டி ஆக்கப்பட்டதும், அதன்மூலம் ஆதிக்கக்காரர்கள் வலிவுபெற்றதும் என்பதையே நியாசாலாந்து மக்கள் உணர்ந்தார்கள். 'ஒற்றுமைக் கீதம்' பாடுவதெல்லாம் நம் இதயத்தின் அறைகளில் ஓட்டிக் கொண்டிருக்கும் கடைசி இரத்தத் துளியைக் கூட உறிஞ்சி எடுப்பதற்கே என்பதை அந்த நாட்டு மக்கள் உணர்ந்தார்கள்.

எனவே, மீண்டும் எழுந்தது' முரசொலி!

"வேண்டாம் இந்த வாழ்வு பிடுங்கும் ஒற்றுமை! பிரிந்து போகிறோம், தனியாக! பழியில்லாத புது வாழ்வினை அமைத்துக் கொள்கிறோம். லட்சியபுரியை நாங்களே அடைந்து கொள்கிறோம்'—என்று கூறிய வண்ணம் களத்தில் இறங்கினார்கள்.

"அடிமையாக்கும் கூண்டு வேண்டாம். ஆனந்த சுதந்திரம் தரும் கூடு வேண்டும். இப்போது இருக்கிற ரொடீஷியாவுடன்கூடிய அடிமைப் பெடரேஷன் வேண்டாம்! டாங்கனீகாவுடன் சேர்ந்தமைத்துக் கொள்ளும் சுதந்திர பெடரேஷன் வேண்டும்!" என்று உரத்த குரலெழுப்பி, ஆதிக்க வெறியர்களின் சூதுக் கோட்டத்தை தூள் தூளாக்கினார், டாக்டர் பண்டா!

விடுதலைவீரர்களின் படை குவிந்தது; வீர சுதந்திரப்போர் நடக்கிறது, இப்போது!

ஆதிக்கப் பிரியர்களின் ஆகாய விமானங்கள் இரைச்சலுடன் விரைகின்றனவாம்! பூமியதிரக் குண்டுகளைப் போட்டு விடுதலைத் தீயை அணைக்க நினைக்கிறார்களாம்!

சோதரர்களின் நல்வாழ்விற்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்டு. விடுதலைத் தாயின் தலைமகனைப் பணியாற்றிய டாக்டர் பண்டாவை வெள்ளையர்கள் சிறைப்பிடித்தார்கள். கனக்கின்ற இரும்புச் சங்கிலியைக் கையிலே பேரட்டு, காராக்கிரகத்துக்குள் தள்ளினார்கள். வெள்ளையர்களின் இந்த 'அழிதகச் செயல்' விடுதலை வீரர்களுக்கு வேகம் ஊட்டியிருக்கிறது! இப்போது நியாசாலாந்தின் பல பகுதிகள் போர்ப் பாசறையாக மாறிவிட்டன.

அந்தோ பாவம்! ஆங்கிலேய ஆதிபத்தியம் சுதந்திரப் போர்களின்போது ஆசியாவில் பட்ட அடி போதாது என்று ஆப்பிரிக்காவிலும் அதே அடியை வாங்கத் துணிந்திருக்கிறது.

விடுதலை வீரர்களின் 'கலகம்' இன்று அடக்கப்படலாம்! ஆனால் நாளையும், மறுநாளும் எங்கு மறுபடியும் விடுதலைப்போர் எனும் எரிமலை வெடிக்குமோ என்று கலக்கம் கொண்டு வாழ வேண்டியவர்களாகத்தான் வெள்ளையர்கள் நியாசாலாந்திலே வாழ்வார்கள்!

நியாசாலாந்து மட்டுமல்ல, பெல்ஜியன்காங்கோ, பிரஞ்சு காங்கோ ஆகிய நாடுகளிலும் போர்க்கொடி உயர்ந்து விட்டது. 'சுதந்திரத்துடன் மீள்வது நோக்கம்—இன்றேல் மாள்வது நோக்கம்' என்று முரசு கொட்டி, படை நிறுத்தி, 'மோதிவிடு பகையை' என்ற கட்டளையையும் பிறப்பித்து விட்டார்கள், அந்த நாட்டுத் தலைவர்கள்!

எழுந்து விட்டான், உதய சூரியன் அந்தக் கண்டத்திலே! டில்லியின் கால்களில் விழுந்து கிடக்கும் தென்னகத்திற்கு முன்னோடிகள் ஆகிவிட்டன, ஆப்பிரிக்க தேசிய இயக்கங்கள்!

'ஒற்றுமை கீதம்' கண்டு கலங்காதே; விடுதலை ஆர்வத்தை வற்றடிக்கும் விஷப் பூண்டு அது—என்று நமக்கு அறிவுரை தந்துவிட்டு விடுதலைபுரியை நோக்கி வீர நடை போட ஆரம்பித்துவிட்டனர், 'கறுப்பு நாட்டினர்'!

பாரதீயத் தீயினால் வெந்து கருகும் இந்த நாட்டுப் பெரியவர்கள் விடுதலைத் தீ பற்றி எரியும் தென்மேற்கிலே திரும்புவார்களா; திராவிடம் எனும் லட்சியத்தை இன்னும் ஆழமாக மனதிலே ஊன்றிக் கொள்வார்களா; திகைப்போ, தயக்கமோ இன்றி விடுதலைப் பாதையில் வீர நடை போடுவார்களா?

—அடியார்

விற்பனையாகிறது

சத்தான தமிழிலே முத்தான கருத்துக்கள்!

கலைஞர் மு. கருணாநிதியின்

சொல்லோவியம்

விலை 1-25

ரத்தின பதிப்பகம்,

29, சின்னச் செட்டித்தெரு, திருச்சி—8.

கக்கனுக்கு வந்த கடிதங்கள்!

யார் — எந்த நேரத்தில் — எத்தகைய வினு எழுப்பினுலும் பதில் சொல்லித்தான் தீர வேண்டும் — இது ஜனநாயகவாதியின் தலையாய கடமை!

பொறுப்பான இடம் — பொது வாழ்வுத்துறை — நாடாளும் சக்தி படைத்த ஆட்சிபீடம் — இங்கெல்லாம்கூட இந்த அரசியல் அரிச்சுவடிக்கு இடமுண்டு!

தமிழக அரசியலைப் பொறுத்த வரையில்கூட இந்தக் கடமையுணர்ச்சி கடைப்பிடிக்கப்படுகிறது என்ருல், அதிசயம்தானே?

ஆனல் ஒரே ஒரு வேறுபாடு....

யார் — எந்த நேரத்தில் — எத்தகைய வினு எழுப்பினுலும் தரப்பட வேண்டியதோ 'சரியான' பதில்! ஆனல் இங்கிருந்து கிடைப்பதோ 'ஏனே தானே' என்ற 'எத்தகைய பதிலோ' தான்!

சென்னை அமைச்சரவை 'உதகமண்டலம்' போக வேண்டும் என்றது. வழக்கம்போல் 'கைதூக்கிகள்' தலையசைத்தனர். எதிர்க் கட்சியினர் கோடை வெப்பத்தையும் உதகைக் குளிரையும் எடை போட்டுப் பார்த்து வாயை மூடிக் கொண்டனர். கேள்வி கேட்டு, அதனல் கேடு களைய விரும்பும் திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரம் "ஏன்?" என்ற எதிர்ப்பு வினவை எழுப்பியது.

தெளிவான கொள்கை இல்லாதவர்கள் — அதனல் சரியான பதில் சொல்லத் தெரியாதவர்கள் — ஏதேதோ உளறினர்கள்! எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்ததைப்போல அமைச்சர் கக்கன் 'கக்கிய' காரணத்தை மட்டும் இங்கே கவனிப்போம்:

"ஊட்டிக்குப் போவதை ஏனே 'கூடாது: கூடாது' என்று தடுக்கிருர்கள்! 'ஏன்; எதற்காக?' என்று கேட்டுத் தொல்லைகள் கொடுக்கிருர்கள்! அங்கிருக்கும் மக்கள் வசதிகள் இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள். அவர்களுக்கு மத்தியிலே சட்டசபையைக் கூட்டி ஏதாவது நன்மைகள் செய்யக்கூடாதா? அப்படி நினைப்பது தப்பா? இதைத் தடுக்கலாமா? இது நீதியா? நேர்மையா?...... ஆகவே பொது மக்களே!..."

—இதைப் படித்த பிறகுதான் நிறைய 'பேர்'களுக்கு உண்மையே விளங்கிற்று!

"ஓகோகோ! இதுவல்லவா காரணம்! ஊட்டிக்குப் போவது குளுகுளு வாசத்திற்காக அல்லவாம்; கும்மாளத்திற்காக அல்லவாம்; அங்கிருக்கும் மக்களின் குறைகளை நீக்கத்தானும்! அடி சக்கை! இதுவல்லவா ராஜரீகம்! இதுவல்லவா ஜனநாயகம்!"

—கனம் கக்கன் அவர்களுக்கு இப்படி பறந்து வந்த பாராட்டுரைகள் ஒரு பக்கம் இருக்கட்டும்; அவை தவிர காங்கிரஸ் ஆட்சியின் காருண்யத்தைக் காணிக்கை கேட்டு குவிந்த மனுக்கள் வேறு எண்ணற்றவையாம்!

அவைகளில் ரகசியமாக நமக்குக் கிடைத்த சிலவற்றை மட்டும் கீழே தருகிரேம்:

★

அன்புள்ள தந்திரிக்கு,

[பையன் தவறுதலாக 'ம' என்று எழுத்துக்குப் பதிலாக 'த'-வைப் போட்டுவிட்டான்; மன்னிப்போம்.]

நான்தான் பிச்சுமணி எழுதிக் கொண்டது. என்னை உங்களுக்கு நல்லாத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன். போன மாசம் எங்கள் பள்ளிக்கூடத்துக்கு கொடி ஏற்றி வைக்க நீங்கள் வந்தப்போ.... அங்கே கூடியிருந்த இருபது பசங்களில் நான் மட்டுமதான் கதர் பேட்ஜ் குத்திருந்தேன்; நீங்கள் பார்த்திருக்கலாமே! அதனல்தான் எனக்கு மட்டும் எங்க டீச்சர் ரெண்டு பெப்பர்மெண்ட் கூட கொடுத்தார். ஏன் இதை எழுதறேன்னு ஒரு முக்கியமான செய்தி! நீங்கள்ளாம் ஊட்டியிலே இருக்கிற ஜனங்களுக்கு வசதி குறைவா இருக்கிறதனலே அங்கேயே போயி சட்ட சபையை கூட்டப்போறதா கேள்விப்பட்டேன்!

இந்த அபாரமான திட்டத்தை நினைச்சுத்தான் நானும் ஒரு யோசனை சொல்ல ஆசைப்படுகிறேன்! இப்ப எங்க பள்ளிக்கூடமும் ரொம்ப சீர்குலைந்து கிடக்கு. எங்களுக்கெல்லாம் சரியான வசதிகளே கிடையாது. பக்கத்திலேயிருக்கிற 'ப்ளே கிரௌண்'டிலே கிரிக்கெட்டே விளையாட முடியலே! ஒரே முள்; கல்! அங்கே இருக்கிற சருக்கு விளையாட்டுக் கருவி துருப்பிடிச்சு சட்டையைப் பிடிச்சு இழுக்குது! ஊஞ்சல் பலகையிலே இரண்டு பேருக்கு மேல உட்கார முடியலே! சுத்தி இருந்த புளிய மரங்களைச் சுத்தி எறும்புப் புற்றுகள் அதிகமாகி விட்டன! தப்பித் தவறி இரண்டொரு கல்லு எல்லையைத் தாண்டி பறந்து, பக்கத்து மாடி கண்ணுடி ஜன்னலை உடைச்சு, காற்றுக்கு வழிசெஞ்சி கொடுத்தாலோ வீட்டுக்காரங்களுக்கு கொஞ்சம்கூட நன்றியே இருக்கிறதில்லே; நாகமா சீறுருங்க!

இந்தக் குறைகளுக்கெல்லாம் ஒரு வழி உடனே செஞ்சாகணும்! அதனல்தான் நான் எங்கப் பள்ளிக்கூடத்துல இருக்கிற 144 பையன்களின் சார்பா இதை அனுப்புறேன்; நீங்கள் ஊட்டியிலே யிருந்து திரும்பினவுடனே எங்கள் பள்ளிக்கூடத்து விளையாட்டு மைதானத்துல ஒரு பத்து நாள் சட்டசபையைக் கூட்டவேண்டியது!"

இப்படிக்கு,

பிச்சுமணி

[ஆருவது வகுப்பு மாணிட்டர்]
சாரதா பாடசாலை.

★

"கனம் அமைச்சர் அவர்களுக்கு,

......மத்திய சிறையிலிருக்கும் கிரிமினல் கைதிகள் தாழ்மையுடன் எழுதிக் கொண்ட விண்ணப்பம். நீங்கள் ஊட்டிக்குப் போவதற்கான காரணத்தைப் படித்து மகிழ்ந்தோம்!

இப்போது, இந்தச் சிறைகள் எல்லாம் முன்போல் இருப்பதில்லை!

ஆகவே, இங்கே உடனடியாக கவனிக்க வேண்டியவை அநேகம்! முதலில் உங்களது 'குடும்பக் கட்டுப்பாடு திட்டப்' பிரச்சாரகர்களை உள்ளே அனுப்பி மூட்டைப்பூச்சி சமுதாயத்தினிடையே பிரச்சாரம் செய்தாக வேண்டும்! 'மெடிக்கல்' கல்லூரி ஒன்று ஏற்படுத்தி வலியில்லாமல் ஊசிபோடும் முறையைக் கொசுக்களுக்கு போதிக்க வேண்டும்! ஊட்டியிலே இன்னுமொரு உல்லாச பங்களா கட்டுவதற்குத் தேவையான கற்களை எங்களுக்குத் தரப்படும் உணவிலிருந்து பொறுக்கி எடுக்க, வேலை தேடித் தரும் ஸ்தாபனத்திலிருந்து அநேகரை அனுப்ப வேண்டும்! தமிழ் நாட்டில் எங்கேயுமே — ஒரு அடி நிலத்தில்கூட இனிமேல் கீரைத் தண்டு பயிரா்க்கக்கூடாது என்று தடையுத்தரவு பிறப்பிக்க வேண்டும்! எங்களுக்குத் தரப்படும் கம்பளிகளை உடனடியாக மாற்றி, குறைந்த பட்சம் கிருஷ்ணமேனன் அவர்கள் மூலம் வெளிநாட்டிலிருந்து 1949 — ல் வாங்கியதைப் போல 'உயர்ந்த' ரகக் கம்பளிகள் வாங்க ஏற்பாடு செய்தாக வேண்டும்!

இவ்வளவு குறைகளையும் களைய வேண்டுமானல் இதற்கு ஒரே வழிதான் எங்களுக்குப் புலப்படுகிறது. வருகிற மே மாதத்தில்குறைந்தது ஒரு வார காலமாவது சட்டசபையையே மத்திய சிறைக்குள் கூட்ட வேண்டுகிரேம்!"

உங்கள் வரவை
எதிர்நோக்கும்,

சிறைக் கைதிகள்.

★

இன்னும் ஏராளமான கடிதங்கள் வந்தன. ஆனல், அவைகளை எல்லாம் கனம் கக்கன் அவர்கள் படிக்காமலேயே ஆத்திரத்தில் கிழித்து விட்டார்!

—சொர்ணம்

முற்றிலும் புதிய பொலிவுடன்
விற்பனையாகிறது!

இலக்கியத் தேனருவி!
ஈடற்ற அறிவுப் புதையல்!

"முத்தாரம்"

● காதற் கடலில் விழ நினைப்போருக்கும் விழுந்து தத்தளிப்போருக்கும் சுவையான சேதி தரும் கையகராதி....

இளங்காதலருக்கு மட்டுமே ..!

● உங்களுக்குப் பக்கத்திலேயே இருப்பவர்களது உண்மையான பண்பு எத்தகையது என்பதை அறிவீர்களா? இந்தச் சங்கடமான ஆராய்ச்சிக்கு விடை...

குணங்களை அளக்கும் கலை!

● நாடு சிறுத்தால் நல்ல வாழ்வு கெடும் — என்கிற பிரிவினை எதிரிகளுக்கு நகரே நாடாகிய அதிசயத்தை விளக்குகிறது.

கீரைப்பாத்தி நாடு

● கலையா? காதலா? வணிகமா? நாடகமா? பதவியா? பணமா? உடற்பலமா? — எதில் நீங்கள் முன்னேற விருப்பம்? அதற்கு வழிபல சொல்லும் இனிப்புக் கட்டுரை...

தாழ்வாய்; உயர்வாய்!

இன்னும்

★ அழகான சிறுகதைகளும், அறிவுக் கதிர் பரப்பும் கட்டுரைகளும் கொண்ட தமிழகத்தின்

புதுமை ஏடு! புதிய முயற்சி!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணநிதி, முரசொலி அச்சகம், 4—128, மவுண்ட் ரோடு, சென்னை-6, தமிழ்நாடு